*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.58/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.சத்தியராஜ் த/பெ. சுப்பு***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **03.09.2024.**
துவக்க நேரம் 12.36

**அரசு தரப்பு வழக்கறிஞர் இல்லை என்றாலும் போலீஸ் பொறுப்பதிகாரியான திரு.மோகன்சுந்தரராசு அவக்ரள் ஆஜராகியுள்ளார். அவர் முன்னிலையில் சாட்சி அடையாளம் காட்டப்பட்டு விசாரணை**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது கெங்கவல்லியில் குடியிருந்து, காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். புகார்தாரர் சித்ரா மற்றும் எதிரிகளை தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். கடந்த சுமார் 2-3 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நியாபகம் இல்லை, ஒருநாள் மாலை சுமார் 03.00 மணியளவில் செல்வராசு மற்றும் சித்ரா ஆகியோர்களுக்கு இடையே ஆடு கட்டுவது சம்மந்தமாக உள்ள பிரச்சனை காரணமாக செல்வராசு சண்டைபோட்டு, கீழே கிடந்த கட்டையை எடுத்து சித்ராவின் தலையில் அடித்தார். பிறகு அவரது மூன்று மகன்களும் சேர்ந்து, சித்ராவை அடித்தார்கள்.

2) சித்ரா கத்தும் சத்தம் கேட்டு நான் வந்து பார்த்தபோது, எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். சித்ராவிற்கு காயம் ஏற்பட்டிருந்தது. அவரை ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கும், அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனைக்கும் சிகிச்சைக்கு கூட்டிச்சென்றேன். நடந்த சம்பவம் பற்றி போலிசார், என்னிடம் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

1) எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். சித்ரா ஆடு கட்டுவதாக சொல்லும் இடத்தில் தான் எதிரிகள் மாடு கட்டுவார்கள் என்றால் சரிதான். மேற்படி இடம் யாருக்கு சொந்தமானது என்றால் அது பொதுவான இடம்.

2) நான் சத்தம் கேட்டுத்தான் சம்பவயிடம் சென்றேன் என்றும், நான் செல்வதற்கு முன்பாகவே சண்டை நடந்து முடிந்துவிட்டது என்றும் சொன்னால் சரிதான். நான், போலிசார் விசாரணையில் சித்ரா உள்நோயாளியாக சேர்க்கப்பட்ட விவரம் தெரிந்துதான் சென்று பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை, நான்தான் சித்ராவை மருத்துவமனையில் சேர்த்தேன்.

3) சித்ராவிற்கும், எதிரிகளுக்கும் இடையேயான முன்விரோதம் காரணமாக சித்ரா பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிகளுடன், எனக்கு பேச்சுவார்த்தை இல்லை என்பதால் சித்ரா கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

முடிவு நேரம் 12.45

ஒம்/–S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.